/ பாதுகாப்பான முறையில்/

அரியலூர் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள்
பிறப்பிப்பவர். திரு.மு. இராமன்,. எம்.எஸ்.சி., எம்.எட்.,

01/10/2021

ந.மு. எண். 7272/அ1/2021, நாள்.29 .09.2021

பொருள்: தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – அரியலூர் மாவட்டம்– உடையார்பாளையம் கல்வி மாவட்டம் – கங்கைகொண்டசோழபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திருமதி.இ.பிரேமா என்பவருக்கு இளநிலை உதவியாளர் பணியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல் – சார்பு.

பார்வை. 1.அரசாணை எண்.101/பள்ளிக்கல்வித்(வரவு செலவு)துறை, நாள்.18.05.2021.
2.சென்னை–03, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணயக்குழு செயலாளரின் கடித எண்.2563/PSD–12/2020, நாள்.21.07.2020.
3.அரியலூர் முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண்.3876/அ1/2020, நாள். 17.09.2020.
4. கங்கைகொண்டசோழபுரம் அரசு மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியரின் கடித ந.க.எண்.392/2021, நாள். 09.09.2021.

---------

அரியலூர் மாவட்டம், உடையார்பாளையம் கல்வி மாவட்டம் பார்வை–2 மற்றும் 3–ன்படி கங்கைகொண்டசோழபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் இளநிலை உதவியாளராக நியமனம் பெற்று பணிபுரிந்து வரும் திருமதி.இ.பிரேமா என்பாருக்கு பார்வை–1ன்படியும் மற்றும் தமிழ்நாடு அமைச்சுப்பணி விதிகளின் தொகுதி 14–ல் வகைப்படுத்தப்பட்டுள்ள இளநிலை உதவியாளர் பணியில் **21.09.2020** முற்பகல் முதல் கீழ்க்கண்ட நிபந்தனைகளின்பேரில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. அன்னார் தனது மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டு தகுதிகாண்பருவத்தினை மேல் அலுவலரின் மனநிறைவு அளிக்கத்தக்க வகையில் முடிக்கப்படல் வேண்டும்.
2. அரசு அலுவலர்களுக்கான பவானி சாகர் அடிப்படைப் பயிற்சி பெற வேண்டும்.
3. தகுதி காண் பருவ காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறைநூல் தேர்ச்சிப் பெறல் வேண்டும்.
4. தகுதிகாண்பருவம் நிறைவு செய்த பின்னரே இரண்டாவது ஊதிய உயர்வு மற்றும் வருடாந்திர ஊதிய உயர்வுகள் அனுமதிக்கப்பட வேண்டும்.

இது சார்பான பதிவுகளை அன்னாரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்யுமாறு சம்மந்தப்பட்ட பள்ளித் தலைமை ஆசிரியர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

இணைப்பு
பணிப்பதிவேடு அசல் (01 பவுண்ட் தொகுதி)
மற்றும் பணிவரன்முறை ஆணை அசல் –02

29/9/2021

முதன்மைக்கல்வி அலுவலர்,
அரியலூர்.

29/09/21

பெறுநர்:

1. தலைமை ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி,
கங்கைகொண்டசோழபுரம்,அரியலூர் மாவட்டம்.
(அசல் ஆணை, பணிப்பதிவேடு அசல் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புதலை உடன் அனுப்பத் தெரிவிக்கப்படுகிறது)
2. சம்மந்தப்பட்ட பணியாளர் (தலைமை ஆசிரியர் வழியாக)